03.03.2026

OS No: 564/2019

பி.வா.சா. 1 திரு. ராமையா த/பெ. கருப்பையா

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் எனது ஊரில் தலைமையாசிரியராக இருந்து 2002 ஆம் பணி ஓய்வு பெற்று தற்போது விவசாயம் செய்து வருகிறேன். நான் 2002 ஆம் வருடம் பணி ஓய்வு பெறுவதற்கு முன்பு எந்த பள்ளியில் வேலை பார்த்தேன் என்றால் நாட்டரசன் கோட்டையில் உள்ள விசாலாட்சி வித்யாசாலை பள்ளியில் வேலை பார்த்தேன். காசி விஸ்வநாதன் என்ன வேலை பார்க்கிறார் என்றால் ஆரம்பத்தில் இருந்து விவசாயம் தான் பார்த்து வருகிறார். 2 ஆம் பிரதிவாதி வடிவேல் என்ன வேலை பார்த்தார் என்றால் ஆசிரியராக வேலை பார்த்து பணி ஓய்வு பெற்றுவிட்டார். உடையார் , சந்திரமோகன் , முத்தையா ஆகியோர் என்ன வேலை பார்த்தார்கள் என்றால் உடையார் ஆசிரியராக வேலை பார்த்து பணி ஓய்வு பெற்று விவசாயம் செய்து வருகிறார்கள். சந்திரமோகன் மற்றும் முத்தையா விவசாயம் செய்து வருகிறார்கள். எனக்கு எந்த கிராமத்தில் விவசாயம் உள்ளது என்றால் செங்குளிப்பட்டி, மாங்காட்டு ஏந்தல் , கண்டிப்பட்டி , ஊத்திக்குளம் ஆகிய ஊர்களில் எனக்கு விவசாயம் உள்ளது. மேற்படி ஊர்களில் விவசாயநிலம் உள்ளது என்ற விபரத்தினையும் அதன் சர்வே எண் விபரத்தினையும் எனது நிரூபண வாக்குமூலம் மற்றும் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஊத்திக்குளம் கிராமத்தில் உள்ள விவசாய நிலத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண் 418 , 419 , 420 என்ற நிலம் உள்ளது மற்ற சர்வே எண்கள் நியாபகம் இல்லை. மேற்படி இடங்கள் ஊத்திகுளம் கிராமத்தில் எனக்கு உள்ளது என காட்டிட பட்டா ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளாகிய நாங்கள் என்ன ஜாதியை சேர்ந்தவர்கள் என்றால் கள்ளர் ஜாதியினை சேர்ந்தவர்கள். பொதுவாக கள்ளர் ஜாதியை சேர்ந்தவர்கள் கோவில் பூஜை வேலைகளை பார்க்க மாட்டார்கள் என்றால் சரிதான். வாதிகள் 4 பேரும் கோனார் சமூகத்தினை சேர்ந்தவர்களா என்றால் இல்லை முத்தரையர் சமூதாயத்தினை சேர்ந்தவர்கள். எனது நிரூபண வாக்குமூலத்தில் காத்தான் குடும்பம் சின்னக்கருப்பன் குடும்பம் எந்த வருடத்திலிருந்து கோவிலுக்கு பணி செய்ய நியமனம் செய்யப்பட்டார்கள் என்றால் முன்னோர்கள் நியமனம் செய்தார்கள் எந்த வருடம் என்பது தெரியாது. 300 வருடங்களுக்கு முன்பு இருக்குமா என்றால் இருக்கலாம். சின்னக்கருப்பன்

குடும்பம் மற்றும் காத்தான் குடும்பம் இறப்பிற்கு பின்பு எந்த வித உயிலோ பட்டயமோ எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். காத்தான் குடும்பத்தில் தற்போது யார் யார் உயிருடன் இருக்கிறார்கள் என்றால் சேவுகன் என்பவரும் அவருடைய அண்ணன் தம்பி வாரிசுகளான 7 நபர்கள் இருக்கிறார்கள். மேற்படி வாரிசுதாரர்களில் சேவுகளைத் தவிர இதர நபர்கள் எங்கு வசிக்கிறார்கள் என்றால் ஊத்திகுளத்தில் வசிக்கிறார்கள். மேற்படி வாரிசுதாரர்களை தாவா 14 ptவழக்கில் சேர்க்க வேண்டும் என ஆட்சேபனை ஏதும் எதிர் வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சின்னக்கருப்பன் குடும்பத்தின் வாரிசுதாரர்கள் எங்கு உள்ளார்கள் என்றால் சின்னக்கருப்பனின் வாரிசுதாரரின் வீடு ஊத்திக்குளத்தில் உள்ளது அவர்கள் சென்னையில் வசிக்கிறார்கள். சின்னக்கருப்பனின் வாரிசுதாரர்களை தாவா வழக்கில் சேர்க்க வேண்டும் என ஆட்சேபனை ஏதும் எதிர் வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். குலையர் அம்பலம் பங்காளிகள் அனைவரும் செங்குளிப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகளாகிய நாங்கள் குலையர் அம்பலம் வகையறாவா என்றால் நாங்கள் அனைவரும் குலையர் அம்பலம் வகையறா ஆவோம் SLR ஆவணத்தில் குறிப்பிட்ட நபர்கள் அனைவரும் குலையர் அம்பலம் வகையறாவை சேர்ந்தவர்கள். வாசாஆ 1ல் சர்வே எண் 419/1 கோவில் இடம் என்றும் 419/2 குலையர் வகையறா இடம்என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 419/1 விஸ்தீரணம் 0.52.5 ஏர்ஸ் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வாசாஆ 1 ஆவணத்தில் சர்வே எண் 419/2 ல் உள்ள நபர்களில் பெயர்களை நீக்கி விட்டு சர்க்கார் புறம்போக்கு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி நபர்களின் பெயர்களை SR No 37A – Sivagangai – 21 Date: 05.03.1971 ஆம் தேதியில் ரத்து செய்து செட்டில்மெண்ட் அலுவலர் உத்தரவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது ஊரில் மலைச்சாமி என்ற பெயரில் ஆள் உள்ளாரா என்றால் இல்லை ஊத்திக்குளத்தில் உள்ளார். என்னிடம் காண்பிக்கப்படும் மாண்புமிகு உயர் நீதிமன்ற மனுவில் WP (MD) 17137/2019 நான் மற்றும் காசி விஸ்வநாதன், உடையார் தரப்பினராக சேர்த்து கொள்ள 25.09.2019 ல் மனு செய்துள்ளேன் என்று சொன்னால் நாங்கள் தாக்கல் செய்யவில்லை அவர்கள் தான் தாக்கல் செய்ய மனு செய்தார்கள் அதற்கு நாங்கள் பதில் தாக்கல் செய்தோம். மேற்படி பதில் எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் நியாபகம் இல்லை. WP (MD) 17137/2019 வழக்கில் எந்த சர்வே எண் சொத்து தாக்கல்

செய்யப்பட்டது என்றால் சர்வே எண் 449/7 , 8 , 409/3 , 4, 7 ஆகிய சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் கோவிலுக்கு சம்பந்தமில்லாத சொத்துக்கள் ஆகும். தாவா வழக்கில் கோவில் சார்பாக சொத்து என்ன சர்வே எண்ணில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சர்வே எண் 419/1 ஆகும். சர்வே எண் 419/2 ஆனது சர்கார் புறம் போக்கு என மாற்றம் செய்யப்பட்ட பிறகு மேற்படி சொத்து எங்கள் அனுபவத்தில் உள்ளது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல எங்கள் அனுபவத்தில் தான் உள்ளது. காத்தான் குடும்பம், சின்னக்கருப்பன் குடும்பம் கோவிலுக்கு தீபம் காட்டி பணி செய்ய எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்றால் சம்பளம் ஏதும் அவர்களுக்கு இல்லை அவர்களது மனம் விரும்பி தான் மேற்படி பணியினை செய்தார்கள். மனம் விரும்பி பணி செய்வதாக சொல்லும் நபர்கள் தாவா வழக்கின் வாதிகள் என்றால் சரியல்ல. கோவிலுக்கு யார் பணி செய்கிறார்கள் என்றால் காத்தான் குடும்பம், சின்னக்கருப்பன் குடும்பம் ஆகியோர் பணி செய்கிறார்கள். கோவில் இருக்கும் இடத்தில் அரிவாள், சூலம் , முனிஸ்வரர் பிரதீஸ்டை செய்தது மேற்படி காத்தான் குடும்பம், சின்னக்கருப்பன் குடும்பமா என்றால் அவர்கள் செய்யவில்லை நாங்கள் தான் செய்தோம். மேற்படி செயலை நாங்கள் செய்தோம் என்பதற்கு நாங்கள் இல்லை என்றும் எங்கள் முன்னோர்களை குறிப்பது என்றால் சரிதான். கட்டாண்டி வகையறா குடும்பம் என எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்படும் குடும்பம் எங்கு உள்ளது என்றால் ஊத்திக்குளத்தில் உள்ளது. கட்டாண்டி வகையறா குடும்பத்தினை சேர்ந்த வாரிசுதாரர்கள் எத்தனை பேர் ஊத்திக்குளத்தில் உள்ளார்கள் என்றால் 7, 8 பேர் உள்ளனர் அவர்கள் பெயர் தெரியாது. தாவா வழக்கிற்கு பின்போ எதிர்வழக்குரைக்கு பின்போ கட்டாண்டி வகையறா குடும்பத்தினை தாவா வழக்கில் தரப்பனராக சேர்க்காதற்கு ஆட்சேபனை ஏதும் செய்துள்ளோமா என்றால் இல்லை மேற்படி கட்டாண்டி வகையறா குடும்பத்திற்கு தாவா கோவிலை வழிபடுபவர்கள் இல்லை என்றும் அவர்கள் சைவ முனீஸ்வரர் ஆலயத்தில் வழிபடுகிறார்கள். குலையர் வகையறா பங்காளிகள் , சைவ முனீஸ்வரர் பங்காளிகள் ஆகியோர் கூட்டாக சித்திரை மாதம் தாவா கோவில் விழா கொண்டாடுவார்கள் என்றால் எல்லாரும் சேர்ந்து எல்லா கோவிலையும் சித்திரை மாதம் விழா கொண்டாடுவது சரிதான். ஆடிமாதம் வெல்லக்கட்டி மஞ்சுவிரட்டு நிகழ்ச்சி எந்த கோவிலுக்கு செய்யப்படுகிறது என்றால் தாவா கோவிலான அய்யனார் முத்தையா கோவிலுக்கு செய்யப்படுகிறது. வெல்லக்கட்டி மஞ்சுவிரட்டு நிகழ்ச்சி

சுமார் எத்தனை வருடமாக நடைபெற்று வருகிறது என்றால் எத்தனை வருடம் என்பது தெரியாது எனக்கு 80 வயது ஆகிறது நான் பிறப்பதற்கு முன்பிருந்தே நடைபெற்று வருகிறது. கோவில் மஞ்சுவிரட்டு நடத்திட தாசில்தார் அலுவலகத்தில் அனுமதி பெற வேண்டும் என்றால் அவ்வாறு இல்லை. ஊத்திக்குளம் கிராமத்தில் பொதுவிலோ அல்லது முத்தரையர் இனத்திற்கு என்றோ எந்த கோவிலும் இல்லை என்று நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சரியல்ல. மருந்தன் வகையறாவினை சேர்ந்த நபர்கள் இருக்கிறார்களா என்றால் 2 பேர் ஊத்திக்குளத்தில் இருக்கிறார்கள். மருந்தன் வகையறாவினை சேர்ந்தவர்களை தாவா வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்பதற்கு ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரிதான் ஏனென்றால் அவர்களுக்கும் தாவா கோவிலுக்கும் சம்பந்தமில்லை. பெரியாம்பிள்ளை வகையறாவினை சேர்ந்தவர்களை தாவா வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்பதற்கு ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரிதான் ஏனென்றால் அவர்களுக்கும் தாவா கோவிலுக்கும் சம்பந்தமில்லை. கண்டிப்பட்டி கிரம எல்லையில் தனியாக கோவில் ஒன்று உள்ளது என்றால் சரிதான்.. கண்டிப்பட்டி கிராமம் மற்றும் ஊத்திக்குளம் கிராமத்திற்கும்இடையே 5 கி.மீ தொலைவு இருக்குமா என்றால் இல்லை இரண்டு ஊரும் ஒன்றாக தான் உள்ளது. நிர்வாக கமிட்டி என எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளதில் அதன் உறுப்பினர்கள் யார் என்றால் வருடம் வருடம் கிராமத்தார்கள் சேர்ந்து தேர்வு செய்வார்கள் யார் என குறிப்பிட்டு சொல்ல முடியாது. கண்டிப்பட்டி கிராமத்தில் சுமார் எத்தனை குடும்பம் இருக்கும் என்றால் 100 குடும்பம் இருக்கும். செங்குளிப்பட்டி கிராமத்தில் சுமார் எத்தனை குடும்பம் இருக்கும் என்றால் 600 குடும்பத்திற்கு மேல் இருக்கும். சிறு செங்குளிப்பட்டி கிராமத்தில் சுமார் எத்தனை குடும்பம் இருக்கும் என்றால் 200 குடும்பம் இருக்கும். துவரிப்பட்டி கிராமத்தில் சுமார் எத்தனை குடும்பம் இருக்கும் என்றால் 50 குடும்பம் இருக்கும். மேற்படி நிர்வாக கமிட்டியில் ஊத்திக்குளத்தினை சேர்ந்த நபர்கள் யாரும் உறுப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பிவாசாஆ 6 ல் புகைப்படத்தில் கண்டதனை போன்று தான் தாவா கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவில் இடத்தில் மரங்கள் உள்ளனவா அவற்றின் வயது என்ன என்றால் பாலைமரம் ஒன்று உள்ளது அது 100 வயதிற்கு மேல் இருக்கும் மற்ற மரங்கள் சுமார் 20 வயது இருக்கும். தாவா சர்வே எண் 419/1 ல் கோவிலை தவிர மற்ற இடங்களில் மரங்கள் உள்ளது என்றால் சரிதான். 29.06.2024 ல் தாசில்தார்

முன்னிலையில் கோவில் சம்பந்தமாக சமாதானம் கூட்டம் நடைபெற்றதா என்றால் போலீஸ் நிலையத்தில் நடைபெற்றது. மேற்படி விசாரணையில் தாசில்தார் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் கலந்து கொண்டார் என்றால் சரியல்ல இரண்டு ஊரினை சேர்ந்தவர்களும் எங்கள் பங்காளிகளும் கலந்து கொண்டார்கள். மேற்படி விசாரணையின் முடிவில் முச்சலிக்கா எழுதிக் கொள்ளப்பட்டது என்றால் சரிதான். அதில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிவாசா ஆ1 முதல்4 வரையிலான ஆவணங்களில் உள்ள தீர்மானங்கள் எங்களது பங்காளிகள் மட்டும் சேர்ந்து செய்து கொள்ளப்பட்டது என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் எங்களது பங்காளிகள் சேர்ந்து தீர்மானம் நிறைவேற்றியது குறித்து பிவாசா ஆ 1 முதல் 4 ஆவணங்கள் பற்றி சங்கதி ஏதும் சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. மேற்படி ஆவணங்கள் குறித்து கூடுதல் எதிர்வழக்குரை ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிவாசா ஆ 1 ஆம் ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட 17 உறுப்பினர்களும் செங்குளிப்பட்டியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி உறுப்பினர்கள் தேர்வு செய்தது குறித்து டிரஸ்ட் ஆவணம் ஏதும் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தில் சொந்த செலவு என குறிப்பிடப்பட்டுள்ளதில் எவ்வளவு தொகை என சொல்லப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிட்ட தொகை சொல்லவில்லை அன்று ஏற்படும் மொத்த தொகையை ஏற்றுக் கொள்வதாக தீர்மானம் இயற்றப்பட்டது. பிவாசா ஆ 2 ஆவணத்தில் கண்டுள்ளது போன்று வருவாய் துறை அலுவலகத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்றால் பிரச்சனை ஏற்பட்டதால் தற்போது வரை அனுமதி பெறவில்லை. பிவாசா ஆ 1 ஆவணத்திற்கான உறுப்பினர் கூட்டம் எந்த வீட்டில் நடைபெற்றது என்றால் வீட்டில் நடைபெறவில்லை கோவிலுக்கு முன்பாக நடைபெற்றது. பிவாசாஆ 3 ஆவணம் தீர்மானத்தின் படி தற்போது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரி14 ptதான். பிவாசா ஆ 6 ஆவணத்தில் அரிவாள் , பலிபீடம் உள்ளது விக்ரகம் உள்ளதா என்றால் இல்லை. பிவாசாஆ 4 ல் கண்ட தீர்மானங்கள் சரியா என்றால் சரிதான். பிவாசா ஆ 1 முதல் 4 வரையிலான தீர்மானங்களில் கண்ட விபரங்கள் ஒரே மையினால் எழுதப்பட்டது என்றால் சரிதான் நான் தான் எழுதினேன். பிவாசா ஆ 1 ஆவணத்தின் படி மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்த புள்ளி அறிக்கை ஏதும் தாவா வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பிவாசா ஆ 5 ஆவணம் யார் பொ14 ptறுப்பில் வாங்கப்பட்டது என்றால் என் பொறுப்பில் வாங்கப்பட்டது. பிவாசா ஆ 5 ஆவணத்தில் குறிப்பிட்ட மதிப்பீட்டு

தொகைக்கு இந்து சமய அறநிலையத்துறையின் அனுமதி பெறப்பட்டதா என்றால் விலை மதிப்பு என்னவென்று தெரிந்து கொள்வதற்காக பிவாசா ஆ 5 பெறப்பட்டது அது சம்பந்தமாக ஒப்பந்த புள்ளியோ அனுமதியோ பெறவில்லை. பிவாசா ஆ 5 ஆவணத்தில் மதிப்பீடு செய்து கொடுத்த ஸ்தபதியின் கையெழுத்து செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பிவாசா ஆ 1 முதல் 6 ஆவணங்கள் குறித்து எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டவில்லை என்றும் தாவா வழக்கினை திசை திருப்பிட மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தின் சார்பாக ஊத்திக்குளம் கிராமதில் தாவா வழக்கினை குறித்து தண்டோரா செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. நான் செய்தித்தாள் படிக்கும் பழக்கம் கொண்டவர் என்றால் சரிதான். தாவா வழக்கு குறித்து ஆட்சேபனை தெரிவித்திட தினமலர் நாளிதழில் 2019 ல் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது என்றால் நான் அதனை பார்க்க வில்லை. 2020 ஆம் வருடத்தில் வழக்கறிஞர் மூலம் தாவா வழக்கில் ஆஜர் ஆகியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கினை தாக்கல் செய்த வாதிகள் பிரதிநிதிகள் கோதாவில் வழக்கு தாக்கல் செய்தது குறித்து நாங்கள் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் ஆட்சேபனை அவர்களுக்கு நாங்கள் பண்ண வேண்டிய அவசியம் இல்லை அவர்களுக்கும் கோவிலுக்கும் சம்பந்தமில்லை. தாவா வழக்கு 2022 ஆம் வருடம் தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் வழக்கறிஞர் மூலமாக 2 வருடத்திற்கு பிறகு எதிர்வழக்குரை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். செங்குளிப்பட்டி என்ற ஊரும் ஊத்திக்குளம் என்ற ஊரும் தனித்தனியானவை என்றும் தாவா வழக்கினை காலம் தாழ்திட நாங்கள் எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரியல்ல.

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.03.03 14:44:46 +0530